19.09.2025

O.S.No.254/2009

வா.சா.2.திரு.முருகன், த.பெ.பிச்சைராமன்.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**13ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வா.சா.ஆ.51, 52 ஆவணங்கள் எனக்கு எப்போது கிடைத்தது என்றால் வா.சா.ஆ.51 – 2025ம் வருடம் ஜனவரி மாதமும், வா.சா.ஆ.52 2024ம் வருடம் டிசம்பர் மாதமும் கிடைத்தது. வா.சா.ஆ.51, 52 ஆவணங்கள் கிடைத்தவுடனேயே நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் ஒரு ஆவணம் வீட்டில் எங்கோ வைக்கப்பட்டுவிட்டது. தேடி எடுத்து மனு தாக்கல் செய்ய காலதாமதமாகிவிட்டது. இந்த வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு ஆவணங்களை காலதாமதமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.51 ஆவணத்தின் 12வது காலத்தில் உள்ள விவரங்களை மறைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நீதிமன்ற கட்டணவில்லை ஒட்டப்பட்டுள்ளது என்றால் இல்லை. எனவே, வா.சா.ஆ.51 ஆவணத்தின் அடிப்படையில், வழக்கு சொத்து சம்பந்தமான விவரங்கள் வெளிப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.51 ஆவணமானது சர்வே எண்.158–ல் கட்டுப்பட்ட மொத்த விஸ்தீரணமான 12 ஏக்கர் 26 செண்டு என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சப்டிவிஷனும் சேர்த்து தான் சர்வே எண்.158/1, 158/2– என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வே எண்.158/1–க்கு எவ்வளவு விஸ்தீரணம் சர்வே எண்.158/2க்கு எவ்வளவு விஸ்தீரணம் என்று தனித்தனியாக காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் வாதிகள்

வாங்கியதாக சொல்லப்படும் ஆவணத்தில் சர்வே எண்.158 என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஐந்து நபர்களும் ஒரே நாளில் கிரையம் வாங்கியதால் சப்டிவிஷன் குறிப்பிடப்படவில்லை. ஆனால், நான்குமாலின்படி, சர்வே எண்.158/1, 158/2–மட்டுமே கிரையம் பெறப்பட்டுள்ளது. மேற்படி, விவரத்தை நான் வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஒரு சொத்தினை கிரையம் பெறும்போது சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண் தான் சொத்தினை அடையாளப்படுத்தும் என்றால் இல்லை. மேற்கண்ட ஆவணங்களின் நான்குமாலின்படி, சர்வே எண்.158/1, சர்வே எண்.158/2–ல் கட்டுப்பட்ட சொத்து என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொத்து விவரத்திலோ, நான்குமாலிலோ சர்வே எண்.158/1 காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சர்வே எண்.158 மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2, 3, 4, 5 ஆகிய ஆவணங்களிலும், சர்வே எண்.158 மட்டுமே காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தானது E.M.G. சௌந்தரராஜன் டிரஸ்டிற்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். சொத்தை விற்பனை செய்து சம்பந்தமாக E.M.G. சௌந்தரராஜன் மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் அனுமதி வாங்கிய விவரம் எனக்கு தெரியும். அந்த வழக்கு 1981ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் சர்வே எண்.158/1ல் கட்டுப்பட்ட ஏக்கர் 1 செண்டு 72 நிலம் விற்பனை செய்ய அனுமதி பெறப்பட்டது என்றால் சரியல்ல. சர்வே எண்.158/1, சர்வே எண்.158/2 சேர்த்து தான் அனுமதி பெறப்பட்டது. மாவட்ட நீதிமன்ற உத்தரவு சம்பந்தமாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. வா.சா.ஆ.51, 52 ஆவணங்களில் வாதிகள் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.51, 52 ஆவணங்களில் அடிப்படையில் எங்களுக்கு எந்தவொரு பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**13ம் பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை 11, 12 பிரதிவாதிகள் தரப்பில் ஏற்றுக் கொள்வதாக 11, 12 பிரதிவாதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.**

<u>மறுவிசாரணை :</u> இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.